DINATHANTHI

30 SEP 2022

PAGE 13

**புதுவை பல்கலைக்கழகத்தில்**

# முதுகலை பட்டப்படிப்பில் சேர ஆன்லைன் விண்ணப்பம்

புதுச்சேரி, செப்.30-

பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கைக்காக (முதுநிலை பட்டப்படிப்பு) தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் கியூட் தேர்வு கடந்த 1-ந்தேதி முதல் 12-ந்தேதி வரை நடந்தது. இதில் வெற்றிப் பெற்று புதுவை பல்கலைக்கழகத்தில் சேருவதற்கு தகுதியானவர்கள் பல்வேறு முதுநிலை பட்டப்படிப்புகள், பட்டய படிப்புகளில் சேரலாம்.

இதற்கான ஆன்லைன் விண்ணப்பத்துக்கான இணைப்பு (http://www.pondiuni.edu.in/admissions-2022-23/) விரைவில் வெளியிடப்படும். மாணவர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள கையேட்டில் உள்ளவற்றை தெரிந்துகொண்டு தங்களுக்கு தேவையான பாடங்களை தேர்வு செய்யலாம். மேலும் புதிய தகவல்களை பல்கலைக்கழக இணையதளம் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.